மாதர் மனோரஞ்சினி.

VOL. I. | MADRAS: JANUARY 1900. | No. 11.
புத்த. க. | சென்னை, 1900-ஆம் ஜனவரிமீ. | இல. கக.

யுத்தம்.

(ஆங்கிலேயருக்கும் போவருக்கும்.)

நம்மனோரஞ்சனியைப் படிக்கும் சகோதரிகளே!

இச்சஞ்சிகையின் முதற்பக்கத்தில் "புது நூற்றாண்டு வாழ்த்து" என்று இரண்டு பாட்டுகள் நம் சக்கிரவர்த்தினியார் சித்திரப் படத்தின் கீழ் இருக்கின்றன, பாருங்கள். இவற்றில் முதற்பாட்டின் கடைசியில் 'மிடிநோய் உளவும் பகையும் ஒழிந்து' என்று இருக்கிறது அல்லவா? மிடி யென்றால் வறுமை, பஞ்சம்; நோய் என்றால் ப்ளேக், காலரா, முதலிய வியாதிகள், என்று அறிவீர்கள். பகை என்றது எதை? இந்த ஆர்டிகலுக்குத் தலைப்பெயராகக் கண்டிருப்பதை. உடனே, போவர்கள் யார்? சண்டைக்குக் காரணம் என்ன? சண்டை எவ்வாறு இருக்கிறது? என்று கேட்பீர்கள். இவற்றை இங்கு சுருக்கமாக விரித்துச் சொல்லுவோம்.

இப்போது டச்சுக்காரர், பிராஞ்சுக்காரர் முதலியவர்கள் சேர்ந்த பல கலப்பு ஜனங்களைப் பொதுப்பட போவர்கள் என்கிறார்கள். ஆனால் பூர்வத்தில் இவர்கள் டச்சுக்காரர்கள். டச்சு ஆட்சியை வெறுத்து, தென் ஆபிரிக்காவில் குடியேறி, அங்கு தன்னரசு நாடு ஒன்று ஸ்தாபித்து, நாளை வரையில் மேன்மேலும் பெருகி வியாபித்து வருகிறார்கள். இவர்களுக்கு குடியேறிய நாள் முதல் இதுவரையில் முக்கிய குணங்கள் இரண்டு: தாம் அந்நியருக்கு அடங்காமை; அந்நியர் தமக்கு அடங்காதிருக்க வொட்டாமை.

இத்தகைய ஜனங்கள் 1814ஆம்-ல் நம்மைப்போல் பிரிடிஷ் குடிகள் ஆனார்கள். எவ்வாறெனில், அவ்வருஷத்தில், தென் * ஆபிரிக்காவில் டச்சு ராஜ்யத்துக்குச் சொந்தமான பாகங்களை யெல்லாம் ஆங்கிலேயர்

---

* இது பூகோளத்தின் ஐந்து பெரும் பிரிவு (கண்டம்) களில் ஒன்று. அவையாவன, ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிகா, அமெரிகா, ஒஷியானியா. இவற்றுள் ஆபிரிக்கா நம் இந்தியாவுக்குத் தென்மேற்கிலும், இங்கிலாந்திற்குத் தெற்கிலும் உள்ளது.

விலைக்கு வாங்கினதினால். இவ்விதம் டச்சு துரைத்தனத்தார் தம்மை ஆங்கிலேய துரைத்தனத்தாருக்குக் குடிகளாக்கினதை அந்த போவர்கள் சகிக்காமல இடம் விட்டு இடம் ஓடிக் குடிபுகுந்து ஆங்காங்கு சுயராஜ்யம் ஏற்படுத்தி, சுதேசிகளாகிய கரியர் (Negroes) களுள்பட எல்லா ப்ரிடிஷ் குடிகளையும் ஹிம்சித்து, கரியர்களை அடிமைப்படுத்துவதும், ஆடுமாடுகள் போல் விலைக்கு விற்பதும், வேறு பலவித கொடுமைகள் செய்வதுமாகத் தலைப்பட்டார்கள். இதைத்தடுக்க நம் காருண்ய துரைத்தனத்தார் முயன்று, முடியாமல் போவர்களோடு சண்டையிட்டு, கடைசியாக அவர் சுவாதந்திரிய ஆட்சியை ஒருவாறு தாம் அங்கீகரிப்பதாகவும், அதற்கு ப்திலி போவர்கள் ஜாதி, மதம், வர்ணம், இப்பேதமின்றி யாரையும் ஒரு தன்மையாய் நடத்தவேணுமென்றும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். இப்படி யிருக்க 1870-வருஷத்தில் போவர் நாட்டின் ஓர் பாகத்தில் வைரம் எடுக்கும் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இப்பாகத்தை மட்டும் முதலில் ஆங்கிலேய துரைத்தனத்தார் விலைக்கு வாங்கி, பிறகு போவர் நாடாகிய ட்ரான்ஸ்வால் முழுமையையும் தம்மதாகச் சேர்த்துக்கொண்டார்கள். இவ்விரண்டு செய்கைகளும் போவர்களுக்கு ஆழ்ந்த மனஸ்தாபத்தை உண்டாக்கின. ஆயினும் தமக்குச் சுயஆட்சி கிடைக்குமென்று சிலநாட் காத்தார்கள். கிடைக்கவில்லை. சண்டைக்குக் கிளம்பி போர் நடந்து, 1881ஆு-ல் முன்போலஒரு உடன்படிக்கையும், அதனால் போவர்கள் முற்றும் திருப்தி பெறாததால் மறுபடி 1884ஆு-ல் ஓர் உடன்படிக்கையும் செய்யப்பட்டன.

1885ஆு-ல் ட்ரான்ஸ்வாலில் தங்கச் சுரங்கங்கள் விசேஷமாய் வெளிக்கு வந்தன. இவற்றின்மேல் ஆசைகொண்டு ஆங்கிலேயர் ஆயிரக் கணக்காய் அங்கு குடி புகத்தலைப்பட்டார்கள். போவர்கள் அசூயையினால், ஆங்கிலேய குடிகளை ஹிம்சித்து, நானாவித அநியாயங்களுக்கும், அசௌகரியங்களுக்கும் உள்ளாக்கினார்கள். இக்கொடுமைகளைச்சகிக்கமாட்டாது, நம் உடன்பிரஜைகளாகிய ஆங்கிலேய குடிகள் மாட்சிமை தங்கிய நம் காருண்ய சக்கரவர்த்தினி துரைத்தனத்துக்கு விண்ணப்பம் செய்து முறையிட்டுக் கொள்ள, அத்துரைத்தனத்தார் தம் குடிகளுக்கு மேற்கண்ட கஷ்டங்களை நிவர்த்தி செய்யும்படி போவர் துரைத்தனத்தாரை நல்ல வார்த்தையாய்க் கேட்டார்கள். கேட்டும், அப்போவர்கள் வாக்குவாதத்திலேயே 1899ஆு மேமீ 4உ முதல், வெட்டவெளியாய்ச் சண்டை தொடங்கிய ஷை ஆு அக்டோபர்-மீ 11உ வரையில் காலம் கழித்தார்கள். இடையில் இரகசியமாயும் மோசடியாயும் யுத்தத்துக்குத் தயார் செய்துகொண்டு இருந்திருக்கிறார்கள் என்று இப்போது தெரிகிறது. ஆகவே ஷை அக்டோபர்மீ 11உ முதல் நாளை வரையில் ஆங்கிலேயருக்கும் போவருக்கும் தென் ஆபிரிக்காவில் சண்டை நடந்து வருகிறது.

இது வரையில் ஆங்கிலேயர் கை சளைத்தாற் போலத்தானிருக்கிறது. இதற்கு என்ன காரணம்? ஆங்கிலேய ராஜ்யமோ சூர்யாஸ்தமன வட்டத்துக்கு உள்ளடங்காது அவ்வளவு பாவி இருக்கிறது; இவ்விராஜ்யத்

துக்கும் போவர் ராஜ்யத்துக்கும் ஆனைக்கும் முயலுக்கும் மாதிரிதானே, என்று கேட்கலாம். இது மெய்யே; ஆனால் "தன் நிலத்தினில் குறுமுயல் தந்தி (யானை) யின் வலிது" என்பது பழமொழி அல்லவா? போவர்களுக்குத் தம் நாட்டிலேயே பொருவதாகிய சௌகரியமும், ஆங்கிலேயர்களுக்கு நன்றாய் முன் பின் தெரியாத அந்நிய நாட்டில படை கொண்டு போய்ப் பொருவதாகிய அசௌகரியமும் ஆகிய இவ்விரண்டு அம்சங்களையும் நாம் மறக்கக்கூடாது. இவை இரண்டும் சேர்ந்து போவர் பக்கத்துக்குச் சாதகமாயும் ஆங்கிலேயர் பக்கத்துக்குப் பாதகமாயும் பெரும்பாலும் இருந்து போவர்களை இது வரையில் தலைகாத்து வருகின்றன. ஆயினும் எத்தனை நாள் இந்நிலைமை இப்படியே இருக்கக்கூடும்? இந்த இடையூறுகளை நம்மவர் இடையூறுகளாக மதிப்பவர் அல்ல. முன்னுக்கெல்லாம் பினனுக்குறுதி. இரையைக்கண்டதும் சிங்கம் பின்வாங்குமாம், எதற்கு? அதிவேகமாய் அந்த இரைமேல் பாய்வதற்கு. இப்போது போவர் தேசத்தின் உளவு அறிந்த லார்ட் கிட்சேனர், பேர்போன போர்வீரராகிய லார்ட் ராபர்ட்ஸ், ஆகிய இவ்விருவரும் ஆங்கிலேய கட்சியில் சேனாதிபதிகளாய்ப் போர்முனைக்குப் போயிருக்கிறார்கள். இனிச் சிலநாளில் எதிரிகள் "ஆழம் தெரியாமல் காலிட்டுக்கொண்டோமே" என்றகதி அடைந்து, அகம் குறைந்து, பெட்டிப்பாம்புபோல் ஆய்விடுவார்கள் என்று சொல்லவும் வேண்டுமா?

ஆனால் இடையில் நேரும் உயிர்ச்சேதத்துக்காக எல்லாரும் துக்கிப்பார்கள். இதை நோக்கியும், சமாதானம், காருண்யம், சத்தியம் ஆகிய இவற்றையே மேற்கொண்டு அவற்றிற்கு விரோதம் ஒன்றும் நேராத வண்ணம் பதினெட்டுவயதுக்குமரியாய்ச் செங்கோல் கைபபிடித்த அன்று தொட்டு இன்று வரை காத்துவரும் நம் சக்கிரவர்த்தினியார் திருவுளத்தை நோக்கியும், கடவுள் நம்மவர் ஜயம் அடையும் நாள் கூடிய சீக்கிரத்தில் வருமாறு அருள்புரிவாராக.

குடும்பசம்ரக்ஷணை.

இரண்டாவது குடும்பத்தைக் குறித்துச்சொல்வோம். இந்தக்குடும்பத்தலைவனுக்கு மாதவருமானம் சொற்பம். இவர் வசிக்கும் வீடு மிகவும் சிறியது. ஆனால் அந்த வீட்டின் பின்புறத்தில் ஒரு சிறிய தோட்டம் இருந்தது. அத்தோட்டத்தின் ஒருபாகத்தில் அரைக்கிரை விதைக்கப்பட்டிருந்தது, மற்றொரு பாகத்தில் வாழைமரங்களும், புஷ்பச்செடிகளும் வைத்துப்பயிராக்கப்பட்டிருந்தன. அத்தோட்டத்தில் சூரிய உஷ்ணம் அதிகமாக படுவதாயிருந்தும் அத்தாவரங்கள் காலாகாலங்களில் தண்ணீர் பாய்ச்சப்பட்டு அதிக பசுமையாயும், செழிப்பாயும் வளர்ந்திருந்தன.

வீட்டிற்கு வேண்டிய காய்கறி பதார்த்தங்கள் அத்தோட்டத்திலேயே அகப்படக்கூடியவையாயிருந்தன. அவ்வீட்டின் எஜமானி தானே வீட்டைச் சுத்திசெய்தும் சமைபல் முதலிய காரியங்கள் செய்தும் வருவாள். தன் வீட்டில் அழுக்குப்படிந்த வஸ்திரங்களும், ஒடிந்துபோன சாமான்களும் இருக்குமானால் அவைகளை யாரும் பாராதவிடத்தில் வைத்திருப்பாள். வீட்டில் இருக்கும் பெண்குழந்தைகள் சும்மாயிராமல் தினந்தோறும் தோட்டத்தில் இருக்கும் குப்பைகளை எடுத்துச் சுத்திசெய்து புஷ்பச்செடிகளுக்கு தண்ணீர் வார்த்து வருவார்கள். பிள்ளைகளோ தாங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடன் வாழைமுதலிய மரங்களின் பாத்திகளைச் சுத்திசெய்து ஜலம் பாய்ச்சிவருவார்கள். அவ்வீட்டின் எஜமானன் கச்சேரியிலிருந்து வந்தவுடன் தம்பிள்ளைகளும், பெண்களும் இவ்விதமாகக் கஷ்டப்பட்டுப் பயிர்செய்வதைப்பார்த்து கச்சேரி வேலையால் தமக்கு உண்டாயிருந்த சோர்வு நீங்கி வெகு சந்தோஷப்படுவார்.

உடனே பிள்ளைகளும் பெண்களும் தாங்கள்வளர்த்துவருகிற மரங்களில் உள்ள காய்கறி முதலிய பதார்த்தங்களையும், ரோஜா முதலிய புஷ்பங்களையும், பறித்துக்கொண்டு தகப்பனிடம் போய், இதோபார் அப்பா! நாங்கள் வளர்த்தமரங்களில் காய்த்த காய்கறிகளென்றும், நாங்கள் பயிராக்கின செடிகளில் புஷ்பித்த புஷ்பங்களென்றும் தனித்தனி காண்பித்து சந்தோஷப்படுத்துவார்கள். இதன் பிறகு தகப்பனானவர் தம் பிள்ளைகளுடன் நித்தியக்கடனைமுடித்துக் கொண்டு தேவாராதனை செய்தபிறகு போஜனஞ்செய்யப்போவார். கைகால் முதலியவைகளைச் சுத்திசெய்து நெற்றியில் குங்குமமணிந்துகொண்டிருந்த அவருடைய பெண்சாதியும் தேவாராதனை செய்துவிட்டு, தன் புருஷனுக்கும் பிள்ளைகளுக்கும் தனித்தனி ஆசனமிட்டு இலைகள்போட்டு அன்னம் படைத்து தான் செய்துவைத்திருக்கும் அறுசுவையோடுங்கூடிய பதார்த்தங்களை அன்புடன் பறிமாறி உண்ணச்செய்வாள். அவர்கள் சாப்பிட்ட பிறகு தானும் சாப்பிட்டு தன் புருஷனுடனும் பிள்ளைகளுடனும் சந்தோஷமாய் உட்கார்ந்து தன் புருஷன் போட்டுக்கொள்ள வெற்றிலை பாக்கு கொடுப்பாள். இப்படி இவர்கள் சந்தோஷமாயிருக்கும் தருணத்தில் புத்திரிகள் தாங்கள் முன்பு கொண்டு வந்த ரோஜா முதலிய புஷ்பங்களை ஒரு தட்டில் வைத்து தகப்பனிடம் வைப்பார்கள்.

பகற்காலத்தை யெல்லாம் உத்தியோக விவகாரத்தில் கழித்து மிகவும் அலுத்து வெறுத்து வந்த தந்தைக்குத் தமது ஆசைக் குமாரத்திகள் மூலமாய் வந்த அழகிய சுகந்த மலர்கள் எவ்வளவு

மனோரம்மியமாயிருக்கும்! உயிரில்லாமலர்களைவிட உயிரோடுள்ள மெய்த்தாமரைமலருக்குச் சமானமாகும் பிள்ளைகளின் முககரசரணாதிகளைக் காணதந்தைக்கு மனம் எவ்வளவு மகிழ்ந்திருக்கும்! அன்பு ஆசை முதலியவைகளே உருவெடுத்து வந்திருப்பதைப்போன்ற தமது சிறு குழந்தைகளைப் பார்க்க தந்தை எவ்வளவு சந்தோஷங்கொண்டாடியிருப்பார்? இப்படியான நற்குடும்பம் சந்தோஷமடைய மோந்துகளிக்கும் அத்தரும், பார்த்துச் சந்தோஷிக்கும் சித்திரப்படங்களும், பரிசத்துக்கு இன்பம் செய்யும் மெத்தை முதலியவும், உண்டுகளிக்கும் பழவர்க்கமும், கேட்டு ஆநந்திக்கும் வீணைமுதலிய வாத்தியங்களும் இன்னும் சமையல் செய்ய பரிசாரகரும் வேண்டுமோ?

மேற்கூறிய இரண்டு குடும்பங்களையும் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, குடும்ப சம்ரக்ஷணையென்பது வீட்டிலிருப்பவர்களுக்கு அவசியமானவைகளையும், சௌகரியமானவைகளையும் தெரிந்து அவைகளை நேர்மையாய்ச் சித்தஞ்செய்துவைப்பதே அல்லாமல் வேறல்லவென்று வாசிப்போர் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்துகொள்ளலாம்.

(இன்னும் வரும்.)

ராணிபாபனி.

மறுபடி தங்கள் இராஜ்ஜியத்தைக் கைவரப்பெற்ற ராஜராமகண்ட் என்கிற ராஜாவும், அவருடைய மனைவியாராகிய **ராணிபாபனி** அம்மாளும் சுகமாக வாழ்ந்து வருங்காலத்தில் அவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்து குழந்தைப்பருவத்திலேயே இறந்து போயின. பின்பு ஒரு பெண்குழந்தை பிறந்தது. அப்பெண்குழந்தைக்குத் **தாரா** என்கிற பெயரையிட்டு நாளுக்குநாள் வெகு அன்பாய் வளர்த்து கலியாணத்திற்குரிய வயது வந்த பொழுது விவாகம் செய்தார்கள். கலியாணமாய்ச் சிலவருடங்கள் சென்றபிறகு அப்பெண்ணினுடைய கணவன் காலகதியால் மரணமடைந்தான். "பெண்களைப்பெற்றவர்களுக்கு இதைவிடத் துக்கம் வேறொன்றுமில்லை." ஐயோ! பாவம் சௌந்திரியமுள்ள தாராவுக்கு உண்டாயிருந்த விசனத்தைப் பார்க்கிலும் எண் மடங்கு விசனம் தாய்தந்தையர்களுக்கு உண்டாயிருந்தது. இத்துக்கம் இவர்களை விட்டு நீங்குவதற்குள் ராஜா

வாகிய ராஜாராமகண்ட் என்பவரும் மரணமடைந்தார். அப்பொழுது ராணிபாபனி யாருக்கு வயது 32. ஐயோ! பாவம், ராணிபாபனியார் அநாதையாய் விட்டார். தனக்கு ஆண்பிள்ளைகளோ கிடையாது. இருக்கிற ஒரு பெண்ணும் விதந்து வாயிருக்கிறாள். தனது கணவனோ எமலோகமடைந்து விட்டார். விசனமோ முன்னிலும் அதிகமாய்விட்டது. இவ்வித துன்பங்களையெல்லாம் வெளிக்குக் காட்டாமல் தன்னுள்ளடக்கிக்கொண்டு, தன்னுடைய பெரிய ராஜ்ஜியத்தைத்தானே ஆளத்தலைப் பட்டார்கள். அக்காலத்தில் தேசத்தில் கலகமு முண்டாயிருந்தது. ஆனது பற்றி கடவுளை தியானித்து, தனது ராணுவங்களைத் தானே விருத்தி செய்தும், இராஜ தர்மத்திலும், குணத்திலும், பராக்கிரமத்திலும்ஒருவரும் இவளுக்கு நிகரில்லையென்று கண்டோர் சொல்லும்படி சுயேச்சையாய் இராஜாங்கத்தை அரசுபுரிந்து வந்ததும் தவிர; தானே சேனைத்தலைவியாகவு மிருந்து வந்தார்கள். அக்காலத்தில், மோர்ஷிடாபாத்துக்குத் தெற்கிலுள்ள பிளாஸி என்ற விடத்தில் இங்கிலீஷ்காரர்களுக்கும், மகம்மதியர்களுக்கும் யுத்தம் நடந்தபோது, ராணிபாபனி அம்மாள் போய்ப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். இந்த யுத்தமானது 1757ம் வருஷத்தில் கிளைவுக்கும், சுரோஜிடௌலாவுக்கும் நடந்தது. இதில் சுரோஜிடௌலா தோல்விபடைந்தான்.

ராணிப்பாபனி அம்மாள் சுரோஜிடௌலாவின் குணத்தை நன்றாயறிந்தவர்களானபடியால், தமது சேனைகளை முன்னிலும் அதிகமாக பலப்படுத்தி வந்தார்கள். சுரோஜிடௌலாவோ தன் முன்னோர்கள் சேகரித்து வைத்திருந்த திரவியத்தையெல்லாம் துன்மார்க்க விஷயங்களில் செலவழித்துவிட்டு, பின்பு செலவழிக்க திரவியமில்லாதபடியால் சுதேச அரசர்களைத் தொந்தரை செய்தும், அக்கிரமமாக ஊரில் கொள்ளையடித்தும் திரவியத்தைச் சம்பாதித்து பலவித கொடுமைகளைச் செய்துவந்தான். அக்காலத்தில் இவனுக்கு துர்மந்திரிகள் அநேகர் இருந்தார்கள்; அவர்கள் சொன்னபடியெல்லாம் கேட்டுநடப்பான். இப்படி அவன் இருந்தபொழுது அநேக சிற்றரசர்கள் அவனுக்குப் பயந்திருந்தார்கள். ராணிபாபனி அம்மாளோ அவனுக்குப் பயப்படாமலும், அவன் ஒருவேளை தம் தேசத்தை எதிர்க்கவந்தால் அவனுடன் யுத்தம் செய்வதற்கு என்னென்ன உதவிகள் வேண்டுமோ அவைகளை யெல்லாம் பலமாய்ச் சேகரித்துக்கொண்டுவந்தார்கள். மேலும் அவன் துன்மார்க்கனு யிருப்பதால் அவனை நீக்கி இந்துக்களில் தகுந்த எவனுக்காவது இராஜாதிபத்தியத்தைக் கொடுக்க எண்ணங்கொண்டும் இருந்தார்கள். இதனுல் தமக்கு அந்த பதவி கிடைக்கவேண்டுமென்னும் ஆசைகொண்டவர்களல்ல. ஆனல் நவாப்பு அவர்கள் தம் தேசத்திலும் கொள்ளையடிக்க ஆரம்பித்தால் அக்கொள்ளையிலிருந்து தமது தேசத்தைக் காப்பாற்றுவதற்காக சைனியத்தைப் பலப்

படுத்தினதும் தவிர புதிதான சீர்திருத்தங்களும் செய்துவந்தார்கள். வங்காள இராஜதானியிலுள்ள சேனைகள் எல்லாவற்றுள்ளும் இவர்களுடைய சேனைதான் மிகுந்த பராக்கிரமமானதென்றும், ஒழுங்குள்ளதென்றும் சிலாகிக்கப்பட்டுவந்தது.

இவ்விதம் ராணிபாபனியார் தம் தேசத்தை அதிக ஜாக்கிரதையாக ஆண்டுவருங்காலத்தில், சில துன்மார்க்கர்கள் ராணிபாபனியாருடைய குமாரத்தியாகிய தாராவைவிட அழகுள்ள பெண் ஒருவரும் கிடையாதென்று நவாப் இடத்தில் சொன்னார்கள். அதைக்கேட்ட நவாப் அவர்களுடைய துர்ப்போதனைக் கிணங்கி அப்பெண்ணை பலவந்தமாய் எடுத்துக்கொண்டு வரும்படி சில துன்மார்க்கர்களை அனுப்பினர். அப்படியே அத்துன்மார்க்கர்கள் சில சிப்பாய்களைக் கூட்டிக்கொண்டு நாட்டுருக்குப்போய் நாவாப் பேரைச்சொல்லி ராணிபாபனியாருடைய பொக்கிஷத்தைக் கொள்ளையடிக்க யோசித்து, ஒரு தூதனை ராணிபாபனியாரிடம் போய் அவர்களுடைய குமரர்த்தியை நவாப் அவர்களுக்குக் கேட்டுவரும்படி அனுப்பினர்கள். ராணிபாபனி அம்மாள் தம்மிடம் வந்த தூதனைக்கொன்றுவிட்டார்கள். இச்சங்கதியையறிந்த துன்மார்க்கர்கள் சிப்பாய்களுடன் ராணிபாபனியாருடைய பொக்கிஷத்தைக் கொள்ளையடிப்பதற்கும், அவர்களுடைய குமார்த்தியைப் பலவந்தமாய் எடுத்துக் கொண்டுபோகவும் ஆரம்பித்தார்கள். ராணி, பாபனியார் தம் சேனைகளைக் கூட்டிக்கொண்டு அவர்களை தோற்கடித்தும் சேனைகளைச் சின்னபின்னமாக்கியும், தம் தேசத்தின் எல்லையைவிட்டு ஒடிப்போகும்படியாயும் செய்து விட்டார்கள். இச்சங்கதி வங்காள இராஜதானி முழுவதும் பரவினபொழுது "அங்குள்ள சிற்றரசர்களெல்லாம் மகமதியர்களுக்கு விரோதமாகக் கிளம்பி கலகஞ்செய்ய ஆரம்பித்தார்கள்.

(இன்னும் வரும்.)

கோலாட்டம், கும்மிகளுக்கு உபயோகமான திருச்செந்தில் தரிசனக்கண்ணி.

அஞ்சொற்செழுங்குயிலே—எனக்குயி
ராகிய பெண்மயிலே
கொஞ்சிக்கருத்துக் கினிக்கவிளையாடுங்
கோதற்றபைங்கிளியே (க)

தென்கடலோரத்திலே—விளங்கிய
திருச்செந்திலாலயத்தில்
இன்பவளந்தருங்கற்பகத்தீங்கனி
என்றுமொன்றுண்டு பெண்ணே (உ)

கண்ணுக்கினிக்கும் பெண்ணே—கேட்டாலுங்
காதுக்கினிக்குங்கண்ணே
திண்ணமாய்ப்புலன் மனம்யாவுக்கு மெப்போதுந்
தித்திக்குஞ் செங்கரும்பே (௩)

கண்டவர்மால்பிரமன்—ஆதியோர்
கைதொழவீற்றிருப்பார்
உண்டவரென்றும் பிறந்திறந்திங்கங்கும்
உழலாதபேறடைவார். (௪)

முதுமையுநோயுமில்லை—அவர்க்கென்றும்
மோகமயக்கமில்லை
விதிவலிதானு மவரிடஞ்செல்லாது
மேலாய்விளங்குவரே. (௫)

மதிகெட்ட மூடர்களும்—உலகிற்பொய்
வாழ்வின் மயங்குவோரும்
துதிபெற்ற நஞ்செந்திற் கந்தமாதனச்செந்தேன்
சுவையறியார்கள் கண்ணே. (௬)

மக்கள் மனைவியென்பார்—அவர்க்குமேல்
மற்றொன்றுமில்லை யென்பார்
அக்கயவர்க்குச் செவிகொடுத்தால் நமக்
காபத்து பெண்மயிலே. (௭)

புண்ணியபாவமில்லை—ஜீவர்கள்
போதல்வருதலில்லை
எண்ணியபடி யுலகின்பத்தைத்தடையற
என்று நுகர்வோமென்பார். (௮)

தெய்வமெங்குள்ளதென்பார்—உலகத்தில்
தெய்வமுமுண்டோவென்பார்
தெய்வமுண்டானக்கால் கண்காணக்காட்டென்று
சிரிப்பார்கள் பேதையரே. (௯)

கண்டதேயுள்ளதென்பார்—ப்ரத்தியட்சம்,
காணாததில்லையென்பார்
பண்டு நெடுந்தவஞ்செய்தவர்க் கல்லாமல்
பலிக்குமோ பொற்கொடியே. (௰)

தூலப்பொருள்களையே—மெய்யெனத்
துணிந்தவப்பேதையர்க்குக்
காலங்கற்பனை மனமாதி கடந்தபொருள்
காணுமோ செந்திருவே. (௰க)

உலகெலாமானபொருள்—செப்புமவ்
வுலகங்கடந்தபொருள்
மலவசப்பட்டோர் விண்வாதத்துக்கெட்டுமோ
மாசற்ற மாணிக்கமே. (௰உ)

அலகிலாச்சென்மந்தொறுஞ்—செய்தவ
அன்பர்க்குப் பேரொளியாம்
உலகப்பொய்யின்பத்தின்மயங்குவோர் சிந்தையில்
ஒழியாதகாரிருளாம். (௰ங)

நாமேபெறுவோம் பெண்ணே—எந்நாளும்
நமக்கது சொந்தங்கண்ணே
பூமேற்சரவணபவ குருகருணையாற்
பொய்யாது சத்தியமே (௰ச)

போவம்வாகண்மணியே—நமதின்ப
பூரணமெய்ப்பொருளை
தேவர்கள் மூவர்க்கு மெட்டாத்திருச்செந்தில்
செல்வத்தைக்கண்டுகொள்ள. (௰ரு)

இன்னும்வரும்.

தேவகுஞ்சரியம்மாள்—திருச்சி.

ஒழுக்கம்.

பூர்வகாலத்தில் இத்தேசத்தில் பெண்கல்வி அதிகமாய் விர்த்தியடைந்திருந்ததென்றும், அதற்கு சாட்சியாய் துரோபதி, தமயந்தி, சகுந்தலை, லீலாவதி, ஔவை, ஆண்டாள் அம்மாள், முதலிய அனேகர் அதிகமாய் படித்திருந்தார்களென்றும் சொல்வார்கள். ஆனால் இப்பெண்கல்வியானது இடையில் ஹிந்து அரசாங்கம் மாறுதலாலும், மகம்மதியர் முதலிய அன்னிய அரசர் ஆளுகையாலும், இன்னும் பல கால சந்தர்ப்ப வித்தியாசங்களினாலும் அனேகமாய் ஒடுங்கி மறைந்துவிட்டது. இக்காலத்தில் நமது காருண்ய இராஜாங்கத்தாரும், கிறிஸ்துவ பாதிரிமார்களும் ஆங்காங்கு

வைத்துள்ள பாலிகா பாடசாலைகளால் பெண் கல்வியானது மறுபடியும் ஒருவாறு விருத்திக்குவர இடமுண்டாயிற்று. அங்கங்கே பட்டணங்களிலும் சில சிறு கிராமங்களிலுங்கூட அனேக சிறு பெண்கள் பள்ளிக்கூடத்துக்குப் போய் படித்து வருகிறார்களென்பது நிஜமே. ஆனால் இவர்கள் படிப்பை படிப்பென்று சொல்ல அவ்வளவாக இடமில்லை. சாதாரணமாய் சற்று எழுத்துவாசனைமாத்திரம் பெற்று பள்ளிக்கூடத்து புஸ்தகங்களிற் சிலவற்றை மாத்திரம் ஒருவாறு படிக்கவும், தப்பும் தவறுமாய் கொஞ்சம் எழுதவும் கற்றிருக்கிறார்களே யன்றி வேறில்லை. இப்படிப் பால் வீட்டுக்கணக்குகள் எழுதவும், தம் சிறு பிள்ளைகளுக்கு எழுத்துகள் சரியாய் சொல்லிவைக்கவும், புருஷர்கள் இல்லாதபோது தம்வீட்டு க்ஷேம சமாச்சாரங்களை தெளிவாய் தபால் எழுதிப்போடவும், இவை போன்றவைகளுக்குக்கூட பிரயோசனமில்லை. இப்படியாயின் "கண்ணுடைய ரென்பர்கற்றோர்" என்றபடி இவர்கள் அறிவென்னும் கண்திறந்து பெரிய இதிகாச காவியங்களைப் படித்துணர்ந்து, நல்லொழுக்கம் பொருந்தி நடப்பது எப்படி? அரைகுறை படிப்பு அபாயம் என்றபடி அனேக பெண்களுக்கு படித்த பெண் என்னும் வீண் கர்வம் உண்டாய் அடக்க மொடுக்கமின்றி நடக்க வழியாகிறது. மற்ற படியாத பெண்களைப்போல் வீட்டு வேலைகளைச் சரிவரச் செய்யாமலும், பெரியோர்களுக்கு உரிய மரியாதைகளைக்காட்டி நடவாமலும் குடும்பத்தில் வேறுமாறான மனஸ்தாபங்களுக்கு இடமுண்டாக்கி, நல்ல படிப்புமில்லாமல் வீட்டு வேலைகளுக்கும் உதவாமல் இரண்டும் கெட்டு பழைய மாமி பாட்டிகளெல்லாம் "அப்பா! படித்த பெண்ணு, போதும் போதும்" என்று பழிகூறவும் இவர்கள் செய்துவிடுகிறார்கள். இதனால் இவர்கள் தாம் கெட்டுப்போவதுமில்லாமல் பெண் கல்விக்கே ஒரு பெருங் கேட்டையும் உண்டாக்குகிறார்கள். எவ்வளவு படிப்பு படித்தாலும் அப்படிப்புக்கு ஏற்க நற்குண நற்செய்கை யமைந்து ஒழுகுவதே படித்த பெண்ணுக்கு இலட்சணமாகும். தம் தம் குல ஆசாரத்திற்கும், இல்லற நெறிக்கும், குடும்ப ஸ்திதிக்கும், தக்கபடி வேலைகளைச்செய்து, உற்றார், பெற்றார், உறவினர், அதிதி, அன்பர், ஏழை, இரப்போர் இவர்களிடத்தில் தக்க மரியாதை, அன்பு, ஆதரிப்புடன் நடந்து, "இல்லாளகத்திருக்க இல்லாததொன்றில்லை" என்றபடி தன் வீட்டைச் சிறக்க வைப்பதே படித்த பெண்ணுக்கு அழகாம். இதைவிட்டு பாடசாலையில் வாசித்த பெண் இங்குமங்கும் உட்காருமாவென்று மேசை, நாற்காலி தேடுவதும், புஸ்தகம் பிடித்தகையால் பாத்திரம் பிடித்து பாகம் எப்படி செய்வதென்று சக்திக்கு மிஞ்சினாலும் சமையலுக்கு ஆளைத்தேடுவதும், புலியைப்பார்த்து பூனை சூடுபோட்டுக் கொண்ட தென்னும் போலி

வேஷமான கவுன் பாவாடை, கத்தரிப்பு ரவிக்கை, குச்சுவைத்த வெஸ்டு கோட்டு, கைகுட்டை, கால்சோடு இவைகளெல்லாம் கொஞ்சத்திற்கு கொஞ்சம் தலை யெடுத்துவரும் பெண்கல்வியை பழிக்குக் கொண்டுவருகின்றன. இதுபற்றியே படித்த பெண்கள் தங்களுக்கும், பெண் கல்விக்கும், அக்கல்வியை யபிமானித்து அபிவிர்த்திசெய்ய முயலும் இப்பத்திராசிரியர் முதலியவர்களுக்கும் பழிச்சொல்வராதபடி "தான் அடங்கத் தன் குலம் விளங்கும்" என்பதையும் கவனித்து நடப்பார்களென்று கோருகிறேன்.

"ஒழுக்கம் உயர்குலத்தில் நன்று".

சக்கரத் தாழ்வான்.

மாயாபுரி விநோதக்கதை.

செல்வச்செருக்கும், கல்விப்பெருக்கும், நீர்வளநிறைவும், நிலவளமலிவும் பொலிந்து, பலவளஞ்சிறந்து விளங்கும் காவேரி நதிசூழ்ந்த சோழவள நாட்டில், காவேரி நதிக்கு நாலுநாழிகை வழிதூரத்தில் வயலூரென்றவொருசிறு கிராமமுண்டு. அந்தக்கிராமத்தில், தருமகுணமும், பரோபகார சிந்தையுமுடைய அருணாசலம் பிள்ளையென்ற ஓர் வேளாளகுலதிலகரிருந்தார். அவர் தேவதாபக்தியிற் சிறந்தவர். மரபொழுக்கந்தவறாதவர். கல்வி பயின்ற விற்பன்னர். அவரே அந்தக் கிராமத்தில் பெரிய குடித்தனக்காரர். செல்வ சம்பத்திற் குறைவில்லாதவர். ஏழைகளை யாதரிப்பவர். இராஜதானியாகிய புஜங்காபுரிக்கும், சைவ, வைணவயாத்திரை ஸ்தலங்களுக்கும் போகிற பல மார்க்கங்களுக்கும் இந்த வயலூர் மத்தியஸ்தான மாதலால் நானாதேசத்து ஜனங்களும் தங்கியிளைப்பாறிப் போகும் பொருட்டு நாலு பாதைகள் கூடுமிடத்தில் ஓர்பெரிய சத்திரங்கட்டுவித்து, வருகின்ற ஏழை பரதேசிகளுக்கு அன்ன வஸ்திராதிகளுமளித்து, யாத்திரை செய்வோர்க்குத் தம்மாலியன்ற வுதவி புரிந்து வந்தார். இந்தச்செய்கையால் பரதகண்ட முழுவதும் தமது பெயர்பரவச் செய்தார். அந்தச் சத்திரமானது ஓர் சிறிய நதிக்கரையிற் கட்டப்பட்டிருந்தது. அந்நதி சிறியதாயிருந்தாலும், எக்காலத்தும் வற்றாமல் நீரோடிக் கொண்டிருப்பதாதலால் பிரயாணிகள் தங்குகிறதற்குச் சௌக்கியமான இடமாயிருந்தது. அதற்கிருபுறத்திலும் ஒரு நந்தவனமும், பலவகையான கனிகள் கொடுக்கும் விருட்சங்கள் நிறைந்த ஒரு தோட்டமுமிருந்தன. அந்தத் தோட்டத்துக்குள் அழகான

சிறிய சாவடியொன்று அமைக்கப்பட்டிருந்தது. சத்திரத்துக் கெதிரில் பிரயாணிகள் உபயோகப்படுத்திக்கொள்ளும் பொருட்டுக் காய் கறித்தோட்டமொன்றமைக்கப்பட்டிருந்தது. பலவகையாலும் அவ்விடம் சகல பிரயாணிகளும், ஞானிகளும், பெரியோர்களும், பக்திமான்களும் வந்து சிலகாலந்தங்குவதற்கு யோக்கியமானதா யிருந்தது. அருணசலம்பிள்ளை யவர்கள் பரம்பரைச்சைவவேள்ளாளர் குலத்திற் பிறந்த சிவபக்த சிரோன்மணியாதலால் அதிகாலையிலெழுந்திருந்து நதிக்குச் சென்று ஸ்நானஞ்செய்து, தோட்டத்திலுள்ளசாவடியில் சிவபூஜாதிகளை முடித்துக்கொண்டு, பத்து நாழிகை பரியந்தமங்கே யிருந்து, யாத்திரையாகவந்து சத்திரத்திலிறங்கும் நல்லோர்கள், பெரியோர்களுக்கும், ஏழைகளுக்கும் வேண்டியவற்றை யுதவிப் பிறகு கிருகத்திற்குச் செல்வதும், சாயந்திரம் இருபத்தைந்து நாழிகைக்குத் தோட்டச்சாவடியில் வந்து சத்திர விசாரணை செய்து, மாலைக்கடன் முடித்துக்கொண்டு பிறகு வீட்டுக்குப் போவதுமாயிருப்பார்.

இப்படியிருக்கையில் அருங்கோடை காலம்வந்து, ஆறு குளங்களில் நீரறவற்றிப் பிரஜைகளெல்லாந் தண்ணீருக்குத் தவிக்குங்கால நேர்ந்தது. காற்று நெருப்பு ஜ்வாலைகளை யிறைத்துக்கொண்டு வீசியது. சகல பிராணிகளும் வெயிலின் உக்கிரந்தாங்கமாட்டாமல் குளிர்ந்த விடந்தேடி யடையலாயின. வயல்களெல்லாம் பாதாளந்தோன்றும்படி வெடித்தன. இக்காலத்தில் வயலூர் நதியூற்று வெள்ளத்தினல் நீரூட்டிப் பிராணிகளை ரட்சிக்குந் தன்மையுடையதாதலால் அருணசலம் பிள்ளையவர்கள் அந்நதியிற் பற்பல சிறு கிணறுகளை வெட்டுவித்தும், தண்ணீர்ப்பந்தல் வைத்தும், பிரயாணிகள் தங்குவதற்குப் பந்தல்கள் போட்டுத் தண்ணீர் தெளித்துக் கோடைவெப்பந்தலை காட்டாதபடி யோடச்செய்து வைத்திருந்தார். பிரயாணிகளே யல்லாமல், சுற்றுப்புறக் கிராம வாசிகளும் குளிர்ச்சியை விரும்பிச் சத்திரந்தேடி வருவார்கள். கல்வியிற் சிறந்த பண்டிதர்களும் வேதாந்தாதி சாத்திரங்களிற்றேர்ந்த பெரியோர்களும் அவ்விடம் வருவார்கள். பலவகைப்பட்ட பறவைகளும், நந்தவனத்திலும், மரச்சோலையிலும் வந்து தங்குவதனல் சதாகலகலவென்ற தொனி கேட்பவர்காதுகளுக் கானந்தம் விளைக்கும். கவிவாணர்களும், கதாப்பிரசங்கிகளும், சாஸ்திரவாதிகளும் ஆங்காங்கு பிரசங்கஞ்செய்து யாவருக்கும் பேரானந்த முண்டாக்குவதனல், சகலரும் கவலையென்பதில்லாமல் சொர்க்கலோக வாசிகளைப்போலச் சதாகளிப்புற்றிருப்பார்கள். நதிக்கரையும் தேவலோகம்போல விளங்கியது. அருணசலம்பிள்ளையவர்கள் பகற்போசன முண்டானபின் தோட்டத்திற்கு வந்து, பெரியோர்களை வணங்கிச் சாஸ்திரவிசாரணை செய்துகொண்டும், கவிவாணர்களுடைய பிரசங்கங்களைக் கேட்டுக்கொண்டும,

பூலோக தேவேந்திரனைப்போல வீற்றிருப்பார். ஒருநாள் அருணாசலம் பிள்ளையவர்கள் தமது வழக்கப்படிப் பகற்போஜன முடித்துக்கொண்டு சாவடிக்கு வந்தார். அப்பொழுது எல்லார்க்கும் போஜனவேளையாயிருந்தபடியால் ஒருவரும் சாவடிக்கு வரவில்லை. பிள்ளையவர்கள் தனிமையாயிருந்தமையால், தோட்டத்தைச் சுற்றிப்பார்த்து வருவோமென்றுபோய்ச் சுற்றிப்பார்த்து வருகையில், தோட்டத்தின் ஈசான மூலையில் மணியோசை கேட்டது. அது யாதெனப்பார்க்கும்பொருட்டு, அவ்வோசை வந்தவழி பற்றி மெதுவாய்ச் சென்றார். அவ்விடத்தில் நாற்பது வயதுள்ள ஒருவர் மஹா பக்தி சிரத்தையோடு தேவபூஜை செய்துகொண்டிருப்பதையும், பக்கத்தில் பாலபருவமுடைய ஒரு பெண் இரண்டுவயதுள்ள ஓர் குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு பூஜைக்கு வேண்டிய உதவி செய்து பயபக்தியோடு நிற்பதையுங்கண்டார். அப்பெண்முகத்தில் இலட்சுமி விலாசந்தவழ்வதையும், அநந்த கல்யாண குணங்கள் பிரகாசிப்பதையுங்கண்டு, நாமுபாசிக்கும் ஜகன்மாதாவே நமக்கநுகிரகிக்கும் பொருட்டு மானிட சொரூபங்கொண்டு வந்தவளாக வேண்டுமென்று கருதி யிதனுண்மையை யுடனே போயறியவேண்டு மென்கிற ஆவலுடையவராயிருந்தும், அப்பெண்ணுடைய உடையாதி தோற்றத்தால் பிராமண குலமெனத் தெரிந்துகொண்டு பூசை முடியுமளவுங் காத்திருந்தார். இரண்டு நாழிகைக்குப் பிறகு அந்தப் பிராமணோத்தமர் பூஜையை முடித்துப் பின்பு தமது மனைவியின் முகத்தை நோக்கிப் பெண்ணே! இன்றையதினம் நாம் புசிக்கும்படியாக ஆண்டவனநுக்கிரகித்தது இந்தப் பழங்களே. ஆதலாலிவற்றைப்புசித்து இச்சத்திரத்தினோர் புறத்திற் படுத்துறங்கிக் காலையிலெழுந்து ஆகாரத்துக்கு வழிதேடுவோமென்றனர். அது கேட்ட பெண்மணியானவள் பிராணநாதா தேவரீர் கட்டளையிட்டதெதுவானாலும் அதைச் சிரமேல் வகித்து நடப்பதைவிட வேறெனக்கென்ன விருக்கின்றது? தேவரீர் பட்டினியிருக்க நேர்ந்ததும், குழந்தை பாலுக்கழுவதுமே யென் மனதை வருத்துகின்றன என்றனள். அது கேட்ட வேதியர் பெண்ணே! எக்காலத்தி லெதையனுபவிக்கவேண்டுமோ? அதை யனுபவித்தே தீரவேண்டும். இன்பமும், துன்பமும் அவரவர் செய்த பூர்வஜன்ம கர்மப்பயனாக ஜகதீசனாலனுக்கிரகிக்கப்படுகின்றன. அதைத்தடைசெய்ய எவராலாகும்? நாம் பண்ணிய கன்மத்துக்கீடாகச் சுகபோகங்களைப் பரமேசுவரனனுக்கிரக்கும்பொழுது அவைகளை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்ட நாம் நமது பாபகன்மத்துக்கீடாகத் துன்பத்தை யனுக்கிரகிக்கும்போது அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளாமல் விசனப்படலாமோ? நாம் செய்த கன்மபலனை நம்மையன்றி யாவரனுபவிப்பார்? "தாந்தா முன் செய்தவினை

தாமேயனுபவிப்பார், பூந்தாமரையோன் பொறிவழியே" என்ற நீதி வாக்கிய முனக்கு ஞாபகத்திலில்லையா? ஆதலால் நீ வருத்தப்படாதே. நற்காலம் சீக்கிரம் வரும் அப்பொழுதுனக்கு ஈசனருட்பெருமை விளங்குமென்றனர். சுவாமி தேவரீர் வார்த்தைக் கெதிர்வார்த்தையுண்டோ! தமது கட்டளைப்படியே நடந்துகொள்ளுகிறேனென்று கணவனளித்த ஏதோ சில பழங்களை வாங்கித்தானும் புசித்துக் குழந்தைக்கும் கொடுத்துக் கணவனுக்கு மகிழ்ச்சியுண்டாகும்படி பல உபசார வசனங்களைப் பேசிக்கொண்டிருந்தனள். அது கண்டு, பதிவிருந்த அருணாசலம் பிள்ளையவர்களிதுதான் தருணமென்றெண்ணி விரைந்து வந்து, அவ்வேதியர் பாதத்தில் சாஷ்டாங்கமாகப் பணிந்து, சுவாமி, எங்கள் முன்னோர்கள் செய்த புண்ணிய வசத்தால் தேவரீரிங் கெழுந்தருளப்பெற்றேன். இந்த ஊரே தமது சொந்தமானதாயிருக்கும்போது தேவரீர் போஜனஞ்செய்யாமலும், மஹாலட்சிமியும், அருந்ததியுங் கருவபங்கமாகும்படி அழகாலும், கற்பாலும் பிரகாசித்து விளங்குகிற எனது மாதாவான இந்த அம்மாளும், குமரமூர்த்தி போல் விளங்கும் இளங்குழந்தையும் பட்டினியிருந்து மூலையிற்படுத்துறங்க யாது காரணமோ? ஐயனே தம் போன்ற மகாத்மாக்களை யுத்தேசித்தே யிந்தச் சத்திரங் கட்டப்பட்டது. போஜனந்தயாராயிருக்கிறது. சீக்கிரமெழுந்து வந்து பசியாற்றிக்கொண்டு என்னைக்கிருதார்த்தனாக்கப் பிரார்த்திக்கிறேன். அதோ வயல்வெளியில் மேய்ந்துகொண்டிருக்கிற நூற்றைம்பது பசுக்களும் தம்முடையனவே அரைக்ஷணத்துக்குள் ஆளனுப்பிக் குழந்தைக்குப் பாலழைப்பிக்கிறேன். சுவாமி கருணைகூர்ந்து எழுந்தருள வேண்டுகிறேனென்று மீண்டும் பணிந்து நின்றார். இது பிராமணோத்தமராகிய சிவசுவாமி ஐயருக்கு மிகவுமாச்சரியமா யிருந்தது; அருணாசலம் பிள்ளையவர்களுடைய முகக்குறியினால் அவர் மஹாபிரபுவென்றும், நிஷ்களங்கமான இருதயமுள்ளவரென்றும், புண்ணிய சீலரென்றும் தெரிந்துகொண்டு, ஐயா இவ்வூரிலெனக்குங் கிரகமிருக்கிறதோ? அப்படியானால் மஹா சந்தோஷம். ஆனால் நான் அன்னியரால் தயார் செய்யப்பட்ட போஜன முண்பதில்லை. பத்தினியே பாகஞ் செய்யவேண்டும். நாங்கள் நெடுந்தூரம் நடந்துவந்திருக்கிறபடியால், என்று நடந்தறியாத இச்சிறு பெண் மிகவுங்களைத்திருக்கிறாள். அவளாலே வேலையொன்றுஞ்செய்ய இப்பொழுதியலாது. கொஞ்சங்களைப்பாறின பிறகு யோசித்துக்கொள்ளவேண்டுமென, அருணாசலம் பிள்ளையவர்கள், சிவசுவாமி ஐயருடைய பேச்சினால் அவர்கள் செல்வ சம்பத்துள்ளவர்களாயிருந்து யாதுகாரணத்தினாலோ சிறுமையடைந்திருக்கவேண்டுமென்று கருதி, மனம் வருந்தி, சுவாமி!

'உடைமையும் வறுமையு மொருவழிநில்லா'' என்ற நீதிவசனப்படி ஒரு காலத்துச் செல்வ சம்பத்திலிருந்து சுகபோகங்களை நுகர்வதும், ஒரு காலத்து வறுமையடைந்து தாழ்வதும், மானிடஜன்மத்துக்கியல்பேயா மென்பது தேவரீருக்கு யான் சொல்லவேண்டுமோ? வினைவலியாரை விட்டது. பிரும்மாதி தேவர்களும் வினைவசத்தாற்பட்ட துயர் சொல்லப் படுமோ? திரிலோகாதிபதியான தேவேந்திரன் சகல வாழ்வையுந்துற ந்து, சூரபத்மாசுரனுக்கஞ்சி மூங்கில் வடிவங்கொண்டு, இந்திராணியோடு மறைந்து காலந்தள்ளிப் பரமேசுவரன் கருணையால் மீண்டும் சகல பாக்கி யங்களையும் பெற்று வாழ்ந்த கதை பொய்யோ? அதுபோலத் தேவரீ ருக்கு நேரிட்டதுயரம் நீங்கி கொஞ்சகாலத்தில் சுகமடையுங்காலம் வரு மாதலால் தாமதியாமலிப்பொழுது யான் செய்யவேண்டிய பணிவிடையைக் கட்டளையிட்டருளவேண்டும். தேவரீர் பழைய பாக்கியத்தைப் பெறுமள வும் என்னைவிட்டகலாமலிருந்து, எனக்குச் சாத்திரோபதேசஞ் செய்யுங் குருவாக வீற்றிருந்து நான் நற்கதிபெறும்படி கடைக்கணித்தருளவேண் டும். தமது முகதரிசனஞ் செய்த மாத்திரத்தில் என்னுள்ளத்திலானந்த மூறுகின்றது. அங்கம் பரவசமாய்ப் புளகமரும்புகின்றது. தம்மைவிட்டு அகலமனம் பொருந்தவில்லை. எப்படியுமெனக்கநுக்கிரகஞ் செய்யவேண்டும் ஆண்டவனே! இந்தக் கிராமாதிகாரி நானே. தங்களைப்போன்ற பெரி யோர்களைக்கண்டு தரிசனஞ் செய்யும்பொருட்டே இந்தச் சத்திரங் கட் டப்பட்டது. தங்களுக் கொருகுறைவும் வாராமற் பாதுகாப்பேன். தமதிஷ் டம்போல என்னிடத்தில் வாசம் பண்ணலாமென்று பிரார்த்தித்து நின் ருர். அதுகண்டு சிவசுவாமி ஐயர் தன் மனைவி முகம்பார்த்துப் புன்முறு வல் செய்து, பெண்ணே! நான் சொன்ன புண்ணிய புருஷர் இவர்தான். இவருனக்குமெனக்கு மூத்தகுமாரனை யொப்பார். ஆதலால் செய்யவேண்டு வதைச் சொல்லென, பிராணநாதா! தமதிஷ்டம்போல நடக்கிறேன். எனக்கு மிகுதியுங்களையாயிருக்கிறது. குழந்தை பசியால் வருந்துகிறது. தாங்களோ சிறிய கனியுண்டுவிட்டமையா லினிப்பகற்போஜனஞ் செய்ய மாட்டீர்களே! இரவிற்றானே போஜனஞ் செய்வீர்கள். தாமுண்பதற்கு முந்தி நான் புசிக்கும் வழக்கமுமில்லையே; ஆகையால் தேவரீரே யாக வேண்டியவற்றைப் பணித்தருளவேண்டுகிறேனென்ருள். சிவசுவாமி ஐயர் அருணசலம் பிள்ளையவர்கள் முகத்தைப்பார்த்து ஐயா! நானிப்பொழுது புசியேன்; இனியிரவிற்றான் புஜிப்பது. என் மனைவியு நானுண்ணுமுன்பு உண்ணுள்; ஆகையால் கொஞ்சம்பால் அழைப்பித்துக் குழந்தையும்,

* புளகம்.—மயிர்க்கூச்செறிதல்.

அவளுங் களை தீர்த்துக்கொள்ளச்செய்தால், பொழுதுபோன பிறகு யோசித்துக்கொள்வோமென்றார். அருணாசலம் பிள்ளையவர்கள் மனமகிழ்ந்து பக்கந் திரும்பி யாரடா! தோட்டக்காரா வென்னுமுன் சுவாமியென்று தோட்டக்காரன் வந்து நின்றான். அவனை நோக்கிச், சீக்கிரமாயோடிப் போய் இரண்டுபடி பசுவின்பால் கொண்டுவரச்சொல்லு நீ நல்ல கனிகளாகப் பார்த்துப் பறித்துக்கொண்டுவா. அடுப்பு மூட்டச் சில கற்கள் கொண்டுவா சத்திரத்திற்போயொரு வெண்கலப் பாத்திரங்கொண்டுவா வென்றார். தோட்டக்காரனப்படியே மஹா பாக்கியமென்று போய் அரை நாழிகைக்குள்ளாக மீண்டுவந்து சுவாமி யெல்லாம் வந்துவிட்டனவென்று அவர் கட்டளை யிட்டவைகளிலொன்றுந் தவறாமற் கொண்டுவந்து வைத்தான். அவர்கள் சுவாமி! அம்மாளைப் பசிக்களையாற்றிக் கொள்ளப்பணித்தருள்கவென்றார். சிவசுவாமி ஐயர் அவர்கள் பெண்ணே யிந்தப்பாலைக் காய்ச்சி, நீயுமுண்டு, குழந்தைக்குங் கொடு வென, அந்த அம்மாள் அப்படியே பால் காய்ச்சச் சென்றனள்.

(இன்னும் வரும்.)

கோலப்புஸ்தகம்.

" எண்ணலெழுதலிலைகிள்ளல் பூப்பறித்தல்
பண்ணமைந்தயாழினோடைந்து"

என்று பெண்கள்கைக்கு ஐந்துவகையழகுகூறப்பட்டிருக்கின்றன. அவற்றுள்,,'எழுதல்'' என்பதே ஆங்கிலத்தில் ட்ராயிங் என்பது. அக்ஷரம் எழுதல், சித்திரம் எழுதல், கோலம் எழுதல், முதலிய பலவும் அடங்கும் அவற்றுள் கோல மென்பது அதற்குள் சகலமான சுபகாரியங்களுக்கும், தேவகாரியங்களுக்கு முபயோகப்பட்டுவருகிறது. அன்றியுமங்களகாரமாய் வீட்டை அலங்கரிப்பது. நமது இந்துதேசத்தில் கோலத்தை மிகுதியும் பெருமைபாராட்டி வருகிறது யாவரும் மறிந்தவிஷயம். நமது நாட்டில் பெண்களே கோலமுதலியவற்றால் வீட்டையலங்கரிக்க கடமைப்பட்டவர்கள். அளவுபடாத விசித்திரகோலங்களுண்டு. அவற்றை தெரிந்தவர்களைக்கொண்டு தெரிந்துகொள்வதேயன்றி, வேறுவகையால் தெரிந்துகொள்ளத்தக்க சாதனங்களொன்றுமில்லை. அக்குறை நீங்கும்பொருட்டு, ஸ்ரீமதி,பள்ளிகொண்ட,ஸ்ரீரங்கநாச்சியாரம்மாள் என்பவர்களால் சேகரிக்கபட்டு, ஸ்ரீமான், விஜயரத்நபிள்ளை என்பவரால் அச்சிட்டுவெளிப்படுத்தியப்புத்தகமொன்று எமது பார்வைக்கனுப்பப்பட்டதுகண்டு சந்தோஷமடைந்து அவ்விருவருக்கும் வந்தனம் செலுத்துகிறோம். இன்னமும்இப்படியே விநோதமான கோலங்களைச் சேகரித்து வெளிப்படுத்தினால் நமது நாட்டுச் சிறுபெண்களுக்கு உதவியாயிருக்குமென்று நம்புகிறோம்.